உ
சிவமயம்

சந்நிதிப் பெருமானின் நேரடி நெறிப்படுத்தலில்
சமய வளர்ச்சி கருதி இவ்வெளியீட்டிதழ் உதயமாகியது



# தொண்டைமானாறு
# ஸ்ரீ செல்வச்சந்நிதி வேலவனின்
# அற்புதங்களும் அனுக்கிரகங்களும்
# 2014

- ஆறாவது வெளியீடு -

பரிபாலன சபை



# பொருளடக்கம்


| | |
|---|---|
| என்குறைகள் தீர்த்த சந்நிதி வேலன் | 03 |
| நோய்க்கு அருமருந்தான சந்நிதி வேலவன் அருள் | 05 |
| என் குறை தீர்க்கும் சந்நிதியான் | 06 |
| சந்நிதி வேலன் அருளிய அற்புத அருளமுதம் | 07 |
| மனமே! சந்நிதியானைப் பற்றிப்பிடி! | 15 |
| கந்தசஷ்டிக் கவசம் | 16 |


# நிர்வாக சபை

தலைவர் : திரு. ஆ. சிவசண்முகஐயர் J.P
செயலாளர் : Dr. சி. செல்வலிங்கம்
பொருளாளர் : திரு. வி. சுரேஸ்குமார்

**உறுப்பினர்கள்**

திரு. த. அகிலேந்திரஐயர்
திரு. த. பாலசுப்பிரமணியஐயர்
திரு. த. குகனேந்திரஐயர்
திரு. அ. லோகேஸ்வரன் ஐயர்
திரு. உ. ரமணன் ஐயர்
திரு. சி. செல்வக்கணேஷ் ஐயர்
திருமதி த. யோகேந்திரா
திரு. பா.சரவணன் ஐயர்

## பூவரசமரத்தடி அன்னதானக் கந்தனின் 2014ஆம் ஆண்டு மகோற்சவ பிரதமகுரு சிவஸ்ரீ தெ. சசீந்திரன்ஐயர் அவர்களின் ஆசியுரை



எந்நிதியும் தரும் சந்நிதி வேலவனின் மகோற்சவத்தின் போது தேர்த்திருவிழா சிறப்பு மலராக வெளிவரும் சந்நிதியானின் அற்புதங்களும் அனுக்கிரகங்களும் எனும் நூல் சந்நிதி வேல்பெருமானின் அருள் ஆசியுடனும் அவருடைய திருவிளையாடல்களையும் தாங்கிவரும் ஆறாவது வருட இச் சிறப்புமலரை இவ்வருடம் ஆலய பரிபாலனசபை மூலம் வெளியீடு செய்து எம்பெருமான் அருள் பெற்று எதிர்காலம் இன்புற்று இருக்க எல்லாம் வல்ல சந்நிதி ஆற்றங்கரை வேலவனின் திருப்பாதங்களை பணிந்து இம்மலர் என்றும் உண்மையை இடித்துரைக்க, உயிர்களிடத்தில் அன்பைப்பெருக்க உலக அமைதியை ஏற்படுத்த, இறையருளை வளர்க்க ஆசி வழங்குகின்றேன்.

திருவருள்துணை
**தெ.சசீந்திரன்ஐயர்**




## ஆற்றங்கரை வேலவனின் நிர்வாக சபைத்தலைவர் சிவஸ்ரீ ஆ. சிவசண்முகஐயர் J.P அவர்களின் வாழ்த்துச்செய்தி

அன்னதானக்கந்தன், ஆற்றங்கரைவேலவன், பூவரச மரத்தடியான் கல்லோடைக்கந்தன், சந்நிதிமுருகன் என பல்லோராலும் அன்பு பொழிய அழைத்து வணங்கும் சந்நிதி வேல்பெருமானின் 2014 மகோற்சவ தேர்சிறப்பு மலராக வெளிவரும் சந்நிதியானின் அருள் ஆசிகிடைத்தமலர் ''அற்புதங்களும் அனுக்கிரகங்களும்'' இம்முறை பரிபாலனசபையின் வெளியீடாக வருவதற்கு ஆசி வழங்கிய எம்பெருமானின் பாதங்களை வணங்கி இம்மலர் உலகெங்கும் உள்ள இந்து மக்களையும் ஏனைய மதத்தவராகினும் முருகனிடம் நம்பிகை உள்ளசகலமானிடரது மனங்களிலும் இடம்பிடித்து அறத்தின் பால் வாழ வாழ்த்துகின்றேன்.

''எந்நிதியும் தருவான் செல்வச்சந்நிதியான்''

ஆ. சண்முகஐயர் J.P



# என்குறைகள் தீர்த்த சந்நிதி வேலன்

ஊர்காவற்றுறை புளியங்கூடலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நான் சிறுபராயத்தில் இருந்தே சந்நிதி கந்தனின் பக்தை திருமணம் செய்து பலகாலம் குழந்தை இல்லை எல்லோரும் மலடி மலடி என்று பேசத்தொடங்கி விட்டனர். எனது கணவரின் சகோதரியின் பிள்ளையின் பூப்புனித நீராட்டு விழாவிற்கு சென்றபோது நாங்கள் குழந்தையில்லாதவர்கள் முன்னிற்கு நிற்கக் கூடாது என்று ஒதுக்கி வைத்து விட்டார்கள். எனது தந்தையார் கூறுவார் பெண்பிள்ளை இல்லையென்று சந்நிதி பெருமானிடம் வேண்டித்தான் நான் பிறந்தது என்று அதை நினைத்து அந்த அற்புதக் கந்தனிடம் சென்றேன் எனது குறையை கூறி ஆலயச்சுவரில் முட்டிமோதி அழுதுவிட்டு வந்தேன்.

அடுத்த மாதமே நான் கற்பவதியாகி முருகனைப் போல் ஓர் அழகான ஆண் குழந்தையை பெற்றெடுத்தேன். இப்போது மூன்று பிள்ளைகளிற்கு தாயாக உள்ளேன்.

சந்நிதியான் எனக்கு நேரில் சமூகமளித்தார். 1986ஆம் ஆண்டிலிருந்து தேர்த்திருவிழாவிற்கு சென்று அடி அழித்து நேர்த்திக்கடன் செய்து வருவேன். 1994 அல்லது 1995 ஆம் ஆண்டாக இருக்க வேண்டும். சரியான கெடுபிடி காலம் சந்நிதியில் கொடியேற்றவில்லை என்று கதைத்தார்கள் தேர்த்திருவிழாவிற்கு முதல்நாள் பஸ்காரரிடம் விசாரித்தேன் அவர்கள் கூறினார்கள் நாளைக்கு தேர் பஸ் ஓடும் என்று நானும் திருவிழாவிற்கு போக ஆயத்தமானேன் எனது தாயார் கூறிவிட்டார் அடி அழித்து முடித்ததும் அங்கு மினக்கெடாமல் நல்லூரில் வந்து சாப்பிட்டு விட்டு வரும்படி நானும் அதன்படி நேர்த்திக்கடன் முடித்துவிட்டு வர வாசலில் எனது சகோதரன் சந்தித்தார் அவரும் கூறினார் ஒரே செல் அடி நடக்குது கெதியா வீட்டுக்குப் போகும்படி நானும் பஸ் இடத்திற்கு அவசரமாகச் சென்றுகொண்டிருந்தேன் இடையில்

எனது கணவரின் பெரிய தந்தை அவரை ஆசையப்பு என்றுதான் கூறுவோம் அவர் வழிமறித்து எங்கபிள்ளை அவசரமாக வெளிக்கிட்டாச்சு என்று கேட்டார் நான் வீட்டை போறன் அப்பு என்று கூற பக்கத்து வீடு ஒன்றைக் காட்டி தனது மகன் குடும்பம் அங்கு நிற்கிறார்கள் போய் பார்த்து விட்டுப் போகும்படி கூறினார். நானும் போனேன் அங்கு அவர்கள் இல்லை. வீட்டுக்காரர் குளிர்பானம் தந்தார்கள் அருந்தும் போது இன்னொருவர் வந்து எல்லோரையும் கூட்டிச்சென்று அன்னதான மடத்தில் முதல் பந்தியில் உணவு தந்தார்கள். வீட்டிற்கு வந்து தாயாருக்கு நடந்ததை கூறினேன். முருகன் தான் பசிக்களையுடன் செல்லாது உணவு தந்தனுப்பினார் என்று கூறினார். இன்னும் அவர் தோற்றம் என் கண் முன்னே நிற்கிறது.

எனது கணவரின் நோயைக் குணமாக்கிய முருகப்பெருமான் 2013ஆம் ஆண்டு எனது கணவர் ஓர் மனநோயாளி 40 நாட்கள் உணவின்றி இருந்தார். பசி இல்லையென்று என்றும் சாப்பிடமாட்டார். தேனீர் மட்டும் சிறிது குடிப்பார். வந்து பார்த்தவர்கள் சாகப் போகிறார் என்று வீடு வளவு துப்பரவு செய்தனர். நானும் முருகனிடம் கேட்டு விரதமிருந்து தேர்த் திருவிழாவிற்கு சென்று ஆற்றில் தீர்த்தம் எடுத்து வந்து பருகக் கொடுத்தேன் அன்றிலிருந்து சாப்பிடத் தொடங்கி இப்போது வழமை போல் சாப்பிடுகிறார். ஊரில் எல்லோரும் அதிசயப்பட்டார்கள்.

தி. நகுலேஸ்வரி
புளியங்கூடல் வடக்கு,
ஊர்காவற்றுறை.

## நோய்க்கு அருமருந்தான சந்நிதி வேலவன் அருள்

பொலிகண்டியைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை மகளாகிய யோகராணி எனக்கும் எங்களது குடும்பத்திற்கும் வந்த நோய்களை எல்லாம் தீர்த்து அருள் வழங்கினார். எனது தகப்பனாரும் சந்நிதி வேலவனின் பக்தர். எனக்கு வந்த கொடிய நோயினால் நான் மிகவும் பாதிப்படைந்த நிலையில் இருந்தேன். எனது நம்பிக்கையை தளரவிடாது வேலவனிடம் சென்று தஞ்சம் அடைந்தேன்.

ஒரு நாள் நான் சந்நிதி வேலவன் கோயிலுக்கு சென்ற வேளை எதிரே உள்ள பற்றுச்சீட்டை வழங்கும் அலுவலகத்தில் நான் கந்தகுருகவசபுத்தகம் கேட்டேன் அவர்கள் அற்புதங்களும் அனுக்கிரகங்களும் என்ற புத்தகத்தை தந்தனர். நான் அதை பயபக்தியுடன் வாங்கி தினமும் அதை படித்து வந்த போது எனக்கு இருந்த நோயெல்லாம் படிப்படியாக மாறியது அத்துடன் நாங்கள் மிகவும் கஸ்ரப்பட்டனாங்கள் எனது தங்கைக்கும் முருகன் அருளால் ஒரு மணவாழ்க்கையை தந்து எங்களது கவலை கஸ்ரங்களை எல்லாம் போக்கினார்.

எனது வாழ்விலும் எனது குடும்பத்தினர் வாழ்விலும் இன்னும் பல முன்னேற்றங்களை எல்லாம் அந்த சந்நிதிவேலவன் தருவான் என்ற நம்பிகையுடன் வாழ்ந்து வருகின்றேன்.

முருகன் தனது அடியவர்களை சோதிப்பார் ஆனால் கைவிடமாட்டார்.

**கி. யோகராணி**
பொலிகண்டி

## என் குறை தீர்க்கும் சந்நிதியான்

முருகா என்று அழைக்கவே
ஓடோடி வருவாய் ஏதோ ஓர் வடிவில்
எம் துயர் துடைக்கவே
நீயெடுப்பாய் பலவேடம்
வேல் என்ற ஆயுதம் தாங்கியே
வினைகளை அறுப்பவன் நீயே
இதனால் உன்னை
வேலாயுதன் என்று அழைப்பார்
தொண்டைமானாற்றில் நீராடி
நோய்கள் தீர்க்கவே
உன்னை ஆற்றங்கரையான்
என்றும் அழைப்பார்
நீ செய்யும் அற்புதங்களுக்கு
எல்லை இல்லை முருகா

தி. கீர்த்திகா
புளியங்கூடல்

*இம் மலருக்கான சந்நதியானின் அற்புதங்களை நேரில் அனுபவித்த எம் பெருமான் அடியார்கள் அவ் அருள்பொங்கும் சம்பவங்களை இறை அன்போடு எழுதி ஆலயபரிபாலன சபை (மலர்) செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு, யாழ்ப்பாணம்.*

*எனும் முகவரிக்கு அனுப்பி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.*

*மேலும் இவ் மலர் வெளியீடு செய்ய மலருக்கான அன்பளிப்பு செய்ய விரும்பும் அடியார்கள் " அறக்கட்டளை நிதியம்" மக்கள் வங்கி க/கு இலக்கம் 285-20010018920 என்ற இலக்கத்திற்கு நிதியினை செலுத்தலாம்.*

*"என்றும் இந்துவாகவே வாழ்வோம்"*

# சந்நிதி வேலன் அருளிய அற்புத அருளமுதம்

ஈழத் திருநாட்டின் முடியாய் விளங்குவது யாழ்குடாநாடு. முடியில் இலங்கி துலங்கும் கோகர்ண மணியாய் அருள்மழை பொழியும் சேத்திரமாக விளங்குவது தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயமாகும். இத்திருத்தலத்தில் எழுந்தருளி அருளாட்சி செய்துவரும் முருகனை ஆற்றங்கரை வேலன் என்றும், சந்நிதிக் கந்தனென்றும், கல்லோடைக் கந்தனென்றும், அன்னதான கந்தன் என்றும், காவடிக் கந்தன் என்றும் இன்னும் எத்தனையோ நாமங்களால் சந்நிதி புராணங்கள் அழைக்கின்றன. இங்கே தல விருட்சங்களாக பூவரசு, நாவல், இத்தி, ஆல், அரசு, வேம்பு, பயறி போன்ற விருட்சங்கள் வீதி சுற்ற அமைந்துள்ளன. ஆலய வளாகத்தைக் கொண்ட சூழலில் தில்லையிலே தில்லைவாழ் அந்தணர்கள் இருப்பது போன்று, மௌனபூசை செய்யும் குருமாரும் அன்னதான மடங்களுமே இங்கு உள்ளன.

இத்தனை சிறப்புக்களைக் கொண்டு அமைந்த இத்தலத்திலே தினந்தோறும் அருட்பெருக்கை நாடிவரும் அடியவர்கள் பல்லாயிரம். இந்த ஆயிரத்தில், ஒருவனாய் அடியேனும் அவன் அருளாலே அவன்தாள் வணங்கி அவர் புகழை உற்சவ காலங்களில் ஆலய வாசலிலே நின்று உரைத்து வருபவன் யான். அவர் அருளால் எனக்கு அற்புத செயல்களும், அருளும், திருவாக்கும் அப்ப அப்போ கிடைக்கும். அவற்றுள் சில சந்தர்ப்பங்களையும் அற்புத அருள்களையும் அடியவர்கள் மத்தியில் எடுத்து இயம்ப எண்ணி ரதோற்சவ மலரில் எழுதுகின்றேன்.

அடியவர்களுடன் 2012ல் வைகாசி மாதம் சுக்கிரவாரத்தினன்று நடுவீதியில் காலைவேளை அளவளாவிக் கொண்டிருந்தவேளை வாசலில் வந்து தரிசனம் பெற்று திரும்பும் அடியவர்களில் சிலர் என்னை அணுகி தாங்கள் கதிர்காம

யாத்திரைக்கு ஆயத்தம் என்றும் என்னையும் தங்களுக்கு தலைமைதாங்கி வருமாறும் அழைத்தனர். அடியேனும் சந்நிதி வேலன் இருக்க எனக்கேன் கதிர்காமம் என்று கூறி யாத்திரையினின்று விடுபட்டுக் கொண்டேன். அடியார்களும் தங்கள் யாத்திரையை மேற்கொண்டு கதிர்காம தரிசனமும் பெற்று மீண்டு வந்து அடியேனுக்கும் விபூதி பிரசாதமும் வேளையும் (நூலும்) தந்தனர். ஆனந்தத்துடன் அவற்றை வேண்டி அணிந்து கொண்டேன். புரட்டாதி மாதமும் வந்தது. வெளிக்கிடு கதிர்காமம், புறப்படு யாத்திரை என்னும் எண்ணமும் மனத்துள் அவன் அருளால் உறுத்தத் தொடங்கியது. எழுந்த எண்ணத்தை நிறைவேற்றும் ஆற்றல் எனக்கில்லை. எந்நிலை உணர்ந்தது என்குடும்பம் கதிர்காமம் காணும் வேட்கைத் தவிப்பில் உலையும் என்னை சந்தோசப்படுத்த நினைத்தான். ஓர் புத்திரி தனது ஓர் நகையை ஈடுவைத்து 20,000/= ரூபாவை கொண்டுவந்து தந்து யாத்திரை செய்யுமாறு கூறினாள். என்நினைவோ யாத்திரை செய்ய, நிலவோ அபரபக்கம் அன்று பஞ்சமித்திதி, வாரமோ சுக்கிரவாரம், சந்நிதி வேலனை காலைப்பூசையில் தரிசனம் பெற்று மனநிறைவுடன் வெளிவீதி வாசலுக்கு வந்தேன். அங்கிருந்து ஒரு நோக்கு பிள்ளையார் வாசல் மண்டபத்தை நோக்கினேன். வேல்சாமி கமக்கட்டில் தாங்குதடியை வைத்திருந்து கொண்டு அங்கே அமருகின்றார். அவர்களுக்கோ கால் இரண்டும் இயலாது. அவர் வயதோ எண்பதையும் தாண்டிவிட்டது. மனத்தில் அவன் அருளால் வேல்சாமியாரை (சோமசுந்தரம்) வழித்துணைக்கு அழைக்குமாறு எழுந்தது. அதைக் கேட்கவும் வைத்தது. அவரும் ஒரேயொரு வார்த்தையாய் சரிசாமி என்று விடை தந்தார். மத்தியாஸ்ட்டமிக்கு புறப்பட்டு அமாவாசைக்கு முன் தினம் செல்வச் சந்நிதிக்கு மீளவேண்டும் என்பதால் பேரூந்தில் செல்வதாயும் விசேடமான ஆலயங்களை தரிசித்து அவ்வாலயங்களில் சேரும்நாள் இரவு தங்கி மறுநாள் மறு ஆலயதரிசனம் செய்வதாயும் சந்தர்ப்பம் கிடைத்தால் பிரசங்கங்கள் செய்வதாயும் முடிவு செய்தோம்.

இங்கேதான் சந்நிதியில் கந்தபுராணத்திற்கு எவ்வளவு பெருமை கொடுக்கின்றனர் என்பது தெரியும். படன காலத்தில் வரும் பார்வதி திருமணத்தினத்தன்று மணவறை அமைத்து அரசாணி வைத்து சிவன் பார்வதியையும் மற்றும் தேவர்களையும் கும்பங்களில் ஆவாகனம் செய்து திருமணவிழாவாகவே கொண்டாடப்படுவதையும் மற்றும் தெய்வயானை திருமணம், வள்ளியம்மை திருமணம் போன்ற விழாக்களும் அவ்வாறே நிகழ்த்தப்படுவதையும், விநாயகர் வரவில் விநாயகருக்கு அதிவிசேட பூசை, அபிசேக, நிவேதியங்கள் செய்வதையும் இன்னும் அதிசிறப்புற கூறின் கந்தஷஷ்டி விரத காலத்தில் யுத்த காண்டத்தின் யுத்தப் பகுதியும் குறிப்பாக சூரன் போரினின்று சூரன்வதைப் படலமும் படனம் செய்யப்பட்டு சூரன்போர் விழா நிகழ்த்தப்படுவதையும் பெருமைக்குரிய ஸ்ரீ செல்வச் சந்நிதியிலேயே முதன்மைத்துவம் கொடுத்து விழாக்களுடன் சம்பந்தப்படுத்தும் பெருமையைக் காணலாம்.

எனவேதான் குறிப்பிட்ட மத்தியாஸ்ட்டமியில் யாத்திரை சந்நிதி கந்தன் அருளால் ஆரம்பித்து (08.10.2012) முதலில் யாழ்நகர பஸ்நிலையத்திலுள்ள சைவ உணவகத்தில் இரவு போசனத்தை இரண்டு நூடில்ஸ் பார்சல் எடுத்து சென்றோம். சந்நிதி முருகனின் அருளற்புதங்கள் ஆரம்பமாயின. உணவருந்த பார்சலை எடுத்தபோது இரண்டு பார்சலுக்குப் பதிலாக 6 பார்சல்கள் இருந்தன. அவற்றில் இரண்டு வடை பார்சலும் இரண்டு நூடில்ஸ் பார்சலும் இரண்டு (பரோட்டா) றொட்டிப் பொதியும் காணப்பெற்றோம். இரவு, யாமம், அதிகாலை என்று 3 வேளை உண்டி உண்ட மகிழ்வுடன் முருகனுக்கு நன்றி செலுத்தும்வேளை சித்தாண்டி முருகன் ஆலய சந்நிதியில் (கிழக்கு மாகாணம்) பேருந்து தரித்தது. அதிகாலைவேளை இறங்கி ஆலய வாசலில் உறங்கி எழுந்து ஆசார சீலர்களாகி முருகப் பெருமானின் தரிசனம் பெற்றதுடன் உண்டியும் பெற்றோம். மாலை மாமாங்கம் நோக்கி புறப்பட்டு இராவணனை வதம் செய்த இராமர் பிரமகத்தி தோஷம் நீங்கப் பெற்ற மாமாங்கப் பிள்ளையாரை தரிசித்து தீர்த்தமாடிய

மகிழ்வுடன் மூன்றாம் நாள் நந்தி புல் உண்ட அற்புதமும், அதி உயரமான கொடித்தம்பமும், சரித்திர கல்வெட்டும் கொண்ட கொக்கட்டிச்சோலை அருள்மிகு சிவலிங்க தரிசனமும், மனம் புளகாங்கிதம் கொள்ளுமளவில் சோதிஐயாவின் உபசரிப்பும் பெற்று கழுதாவளை பிள்ளையார் தரிசனமும் கண்டோம். வியாழன் அன்று காரைதீவு நந்தவன விநாயகர் ஆலய பிரதம குருவிடம் இருந்து ஓர் அழைப்பு தொலைபேசியில் பெற்றோம். ஐயா தாங்கள் கிழக்கு மாகாணத்தில் யாத்திரை செய்வதாய் அறிந்தோம். எமது ஆலயமும் வரவேண்டும் என்றார்கள். அதற்கு நான் நீங்கள் எனது உரை கேட்பதற்கு ஒரு ஏற்பாட்டை செய்யுங்கள் வருகின்றோம் என்று கூற அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். வியாழனன்று காரைதீவு நந்தவனசித்திவிநாயகர் கோவிலை மாலைப் பொழுதில் சென்றடைந்தோம்.

இங்கே எம்பெருமான் காட்டிய அருளமுதம் என்னே! சுக்கிரவாரம் அன்று காலைப் பூசைக்கு வந்த அடியவர்களோ எட்டு அடியார்கள். இவர்கட்கா பிரசங்கம் செய்யப் போகின்றீர்கள்? என்றார் யோகேஸ்வர குருக்கள். பூசையை முடித்துவிட்டு தன் குழந்தைகளை பாடசாலை கொண்டு சென்று விட்டுவிட்டு காலை ஆகாரத்துடன் வருவேன். வரும் வரையில் பொறுத்து இருக்குமாறு கூறிச் சென்றார். வடக்கு வழியாக அவர் செல்ல சந்நிதி முருகா அருளாயோ நந்தவன சித்தி விநாயகரும் கைவிட்டாரோ என்று ஆலய வாசலில் புலம்பினேன். மூன்றாவது நிமிடம் ஆலய வாசலின் தென்புற வழியாக 6 ஆசிரியர்களும் ஒரு குறிப்பிட்ட தொகை மாணவர்களும் ஆலயத்துள் பிரவேசித்தார்கள்.

வந்தவர்களில் தலைமை ஆசிரியர் என்னிடம் நேரே வந்து தங்கள் பாடசாலை மாணவர்கள் இதுவரை காலமும் பாடசலையுடன் இருக்கும் விஷ்ணு ஆலயத்திலேயே கூட்டு பிரார்த்தனை செய்வதாயும் இன்று மன ஏவலினால் முதன்முதலில் பிரார்த்தனை செய்வதற்காக இங்கு வந்தோம் என்றும் கூறிக் கொண்டார். இறைவனின் எண்ணத்தை என்னென்று சொல்வேன்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்" என்னும் குறட்பாவுக்கிசையவே நடக்கின்றது. அடியேனும் ஆசிரியரிடம் நிகழ்ந்தவற்றை கூறினேன். அவர்களும் தம் மாணவ மணிகளுக்கு உரையாற்றுமாறு பணித்தார். முன்னுரையும் செய்தார். முடிவில் நன்றியுரையும் செய்தார். அடியேன் தமிழ் வேதம் என்னும் தலைப்பில் உயிர் எழுத்து "அ" வை ஜீவ ஆன்மாவின் உயிருக்கும் மெய் எழுத்து "க்" வை மெய்ப்பொருளான பரமாத்மாவுக்கும் உயிர்மெய் எழுத்தாகிய "க" மானிட ஜீவ ஆன்மாவுக்கும் ஆயுத எழுத்தாகிய "∴" திருவருளாகிய திருவடி தீட்சையாயும் ஒப்பிட்டு திருவருளால் திருவடி தீட்சை பெற்றால் ஜீவான்மா பரமாத்மா நிலையை அடையும். க் + அ = கா க் ∴ ஆகும் என்றும் இச்சா சக்தி கிரியா சக்தி ஞானா சக்தி மூன்றுமே "∴" ஆயுத எழுத்தென்றும் எடுத்துரைத்தேன். ஈடேற்றப்பட சக்தி கொண்ட வேலே ஆயுத எழுத்தென்றேன். அடித்துரைத்தேன். அருள் சக்தியை இடித்துரைத்தேன். (40 நிமிடங்கள்) முடிவில் ஆசிரியர் குழாம் எனை அணுகி ஆசீர்வதிக்க வேண்டுமெங்களைத் தாங்களென அது மட்டுமல்ல மாணவ மணிகளையும் ஆசீர்வதித்து விடைபெற்றும் அங்கிருந்து உவந்தைக்கு செல்ல அதிசயித்து பார்த்து நின்ற குருக்கள் பிட்டமுதும் தந்து வழி அனுப்பினார்.

பொத்துவில் பாணமை ஊடாக ஆனைக்காடு மயில்கள் நடமிடும் சோலையான உவந்த மலை முருகன் ஆலயத்தை வந்தடைந்தோம். இவ்வாலயத்திற்கு செல்ல வாகன போக்குவரத்து கிடையாது. விஷேட வாகனத்தில்தான் பாணமையிலிருந்து செல்ல வேண்டும் 14 கிலோ மீற்றர் தூரம். நேரமோ மாலை $3\frac{1}{2}$ மணி, வயிறோ பசி, உடலோ பசியினால் வாடிவிட்டது. உவந்த மலைமுருகன் வாசலுக்கு நேராக ஒரே ஒரு கடை. அதன் முன் வாங்கிலில் அமர்ந்திருந்த வண்ணகரும் (மணியம்) உதவியாளர்களும் வாசலுக்கு சமூகம் கொடுத்த எம்மை வரவேற்று பசிக்களையை போக்கினர். அங்கே முருகன்

கோயிலுக்கு வலது புறத்தில் வள்ளி நாயகி கோயில் கொண்டிருக்கும் குன்றுண்டு. குன்றில் 8 சுனைகளுமுண்டு. வேறுபட்ட சூடு கொண்ட நீர் கொண்டவை. இத்தீர்த்தம் வள்ளியம்மை தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு நீராடினால் பிரமகத்தி விலகும் என்றனர். உதவியாளர்களின் உதவியுடன் நீராடினேன். இறங்கி அடிவாரத்தை அடைந்தோம்.

அடிவாரத்தில் ஆதிகாலத்து வெண்நாவல் மரத்துடன் கூடிய விநாயகர் ஆலயம் இருந்தது. அண்மித்த போது மெய்சிலிர்த்தது. அங்கேயும் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் கதிர்காம விழாவிற்கு வேல் அனுப்பும் வைபவத்திலே வேல்விடும் பூவை எறிந்தபோது அடியேன் கண்ட காட்சி ஒரு மின்னல் பாய்ந்த காட்சி. அக் காட்சியே இங்கே அந்த வெண்நாவல் மரத்திலே சில நிமிடங்கள் நிலையாக தென்பட்டது. தொடர்ந்து அந்த நாவல் மரத்தின் வெடித்திருந்த பட்டை துண்டுகள் பிரணவரூபத்தில் ஒன்றுடன் ஒன்று இணையத் தோன்றின. ஓமுக்குள் ஓ இப்படி மரத்தில் வெடித்திருந்த பழமை மிகுந்த பட்டைகள் காட்சிதர அவற்றை எனது தொலைபேசியில் Video படமாக்கிக் கொண்டேன். அக்காட்சியை வண்ணக்கர் போன்ற அடியவர்கட்கு காட்டியபோது தாமும் இதுதான் முதன்முறை இப்படிப்பட்ட அற்புதமான அருட்காட்சியை காண்பதாக கூறினார்கள். சோதிநாதசர்மா அவர்களால் அவ்வாலயம் பூசை புனக்காரங்கள் செய்யப்பட்டு வருகின்றன. செல்வச் சந்நிதி முருகன் அருளால் நீங்கள் காணும், காட்டும் காட்சியை தாமும் கண்டு செல்வச்சந்நிதி முருகன் அருள் வேண்டிய அவர்கள் இந்த வெண்நாவலில் .வேல்வந்து குத்தி குத்தி செல்வதால் இப்பட்டை வெடிப்பு ஏற்பட்டு வருவதாக கர்ணபரம்பரை கதையை கூறினர். ஸ்ரீ செல்வச்சந்நிதி வேலும் கதிர்காம வேலும் உவந்து பிரணவத்தை பொறித்து செல்லும் உண்மையை விளக்கி அருளிச் செய்யும் தலமே உவந்தமலை முருகன் ஆலயமாக எமக்கு விளங்குகின்றது. இந்த Video காட்சியை இப்போது ஸ்ரீ செல்வச்சந்நிதி.கொம்மில் நெற்றில் அடியவர்கள் அனைவரும் பார்வை இடலாம்.

இந்த அற்புத அருள்களை எல்லாம் எமக்கு தரும் முருகன் சந்நிதியிலும் சில அருளமுதமாக அற்புதங்களை நிகழ்த்திய வண்ணமே உள்ளான்.

2013 லும் வருடா வருடம் அடியேனால் சிலகாலம் நிகழ்த்தப் பெற்று வரும் பிரசங்கம் நிகழ்த்தப் பெற்றது. அன்று (சிறுத்தொண்டநாயனாரின் வரலாறு) சிறுத் தொண்டனிடம் பிள்ளைக்கறி அமுதாக பெறும் பைரவ சந்நியாசி கூறுகின்றார். நான் தனிமையில் சாப்பிடுவது இல்லை. என்னுடன் அமுது கொள்ள ஓர் அடியவர் வேண்டும் என சிறுத்தொண்டரோ ஊரெல்லாம் தேடியும் ஒரு சிவனடியாரையும் காணாத நிலையில் தானே சிவனடியாராகி விபூதி புனைந்து தன் மகனூண் என்றும் பாராது அருந்த ஆயத்தமாகி பைரவரை உண்ணவைத்து விடலாம் என்னும் எண்ணத்துடன் அவசரப்பட்டு அமுதை பிசைய தடுத்து ஆறு மாதங்கழிந்து (திங்கள்) உண்ணும் நான் உண்ண முன்நீர் உண்பது என்ன ''என்னுடன்'' நம்முடன் துய்ப்பமாறில் மகவு பெற்றீரேல் மைந்தன்தனை அழையுமென்று பைரவசன்னியாசியாக காணப்படும் இறைவன் கூறுகின்றார்.

அந்தவேளை தன் மனையாளுடன் மனை வாசலின் வெளி வாசலில் நின்று எந்தாய் வருக இடர்தீர்க்க இங்கு வருக எமது குல மைந்தா வருக, மாணிக்க மணியே வருக, மாதவத்தால் வந்தாய் வருக, மறைஞான மதலாய் வருக, மதி அணையாய், சிந்தாகுலம் தீர்க்கும் சீராளதேவ வருக வருக ஓவென்று ஓலமிட்டு கதறி அழைக்கின்றனர். இந்த இடத்தில் அடியேனும் கதறி அழைத்தேன். என்னை மறந்தேன். என் சுயநினைவிழந்தேன். தெளிவில்லாது இரவில் ஒளி இழந்த நிலைபோல் நினைவின்றி நின்றேன் சில கணங்கள். பின் கண்களை மூடிய போது எனது இந்த உரையை இத்துடன் நிறுத்திக்கொள்வோம் மிகுதியை நாளை தொடருவோம் என்று எனது மனம் கூறியது. பைரவரை வணங்கி வேண்டி முருகப் பெருமானின் சிந்தனையுடன் கண்களை திறந்தேன்.

அப்போதுதான் அந்த அருள்பெருக்கின் அற்புதம் நிகழ்ந்தது. அடியேன் உரை ஆற்றிக் கொண்டிருக்கும் ஒலிவாங்கியின் இணைப்பு (வயர்) ஆலயத் திருவாசலிலிருந்து ஒலிபெருக்கி அறைக்கு தொடர்பாய் உள்ளதை நான்கு நாய்கள் பைரவரின் வாகனங்களாக கருதப்படுபவை ஆலமரத்தின் கீழ்முகமாக எங்கிருந்தோ ஓடி வந்தன. நான்கும் வயரை கடித்துப் பிடித்து அறுத்தே விட்டன. இதனால் ஒலிபரப்பு துண்டிக்கப்பட்டது. இதனால் இணைப்பு பெறுவதற்கு "10" பத்து நிமிடங்கள் இடைவேளை நேரமாக கிடைத்தது. மீண்டும் ஆசுவாசத்துடன் பழைய நிலையை உணர்ந்தேன். அவன் அருளாலே அவன் தாள் வணங்கி அன்றைய உரையினை மீண்டும் தொடர்ந்து உரைசெய்து சிறுத்தொண்டன் குடும்பசமேதமாக இறையடி இணைந்ததையும் சிவன், பார்வதி, முருகன் முக்தி தந்ததையும் கூறி முற்றுப் பெற வைத்தேன். இது போன்ற எத்தனையோ அற்புதங்களை ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் அடியவர்கட்கு நேரில் நிகழ்த்தி அருள் புரிந்து வருகின்றான். நாமும் தரிசனம் பெற்று அருள் பெறுவோமாக.

ஸ்ரீ செல்வச்சந்நிதி முருக அடியான்
சு. ஜெயகோபாலசாமி



## மனமே! சந்நிதியானைப் பற்றிப்பிடி!

வேலுண்டு வினையில்லை! மயிலுண்டு பயமில்லை!
ஏன் வெம்பி அழுகின்றாய் மனமே!
எதற்கு நீ பயம் கொண்டாய் மனமே! மனமே!
காலுண்டு சந்நிதித் தலம் காணக் கையுண்டு கூப்பித் தொழ;
நாவுண்டு பாடிவர நலமே - தினம் நான்வந்து
உனைத் தொழுவேன் உடனே! உடனே!! - முருகா
நீ வந்து தாய்போல; மனம்கொண்டு எமைக்காக்க
மனநோய் வந்து புகுந்திடுமா உடனே
வேல் வந்து விலக்கிவிடும் திடமே! திடமே!!
உடல் வளர்ந்து முதுமைகாண, மனம் சோர்ந்து
உனையும் நாட மயிலேறி வந்திடு இக்கணமே
மனம்நோக வைத்திடாதே தினமே! தினமே!

**சின்னப்பு தனபாலசிங்கம்**
புலோலி வடமேற்கு

உப்புக் கடலருகே ஆறோடுது - அந்த
ஆற்றங் கரையோரத்தில் தேரோடுது
தப்பாமல் அருள் சுரக்கும் சந்நிதி வேலன்
சஞ்சலங்கள் தீர்த்து வைப்பான் - இது சத்தியம்

எங்கும் காணா அற்புதங்கள் சந்நிதியில் நான் கண்டேன்
சங்கார வேலனவன் சந்நிதியில் சரித்திரம் காணா
பொங்கும் கடலலையோ அடியார் வெள்ளம்
சங்கரன் சுதனின் அற்புதங்களோ ஆனந்தம்!

சந்நிதியானே உனைத் தொழுவதால் சஞ்சலங்கள் ஓடுது
இதுவுண்மை! சார்ந்துனை அண்டினர் ஞானிகளுமே!
ஏற்றம் பெற்றனர் ஏழைகளுமே! எத்திக்கும் உந்தன்
புகழ் மணக்குது! பூத்தது என் மனதில் கவிதையொன்று!

**சு. தங்கேஸ்வரன்**
காட்டுப்புலம், தொண்டைமானாறு

# கந்தசஷ்டி கவசம்

## காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோந் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங்கை கூடும் நிமலனருள் கந்த
சஷ்டி கவசந் தனை.

## குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடிநெஞ்சே குறி.

## நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சர்வண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டிற் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மைய நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர

ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையிற்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கிற் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும்இணை முழந் தாளும்
திருவடி யதனிற் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகென
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென

டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேஷமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியாற் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டுங் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க

சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறியிரண்டும் அயில்வேல் காக்க.
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைகளிரண்டுங் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்கதரும்
அடியேனைக் கண்டால் அலறிக் கலங்கிட

இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியேனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தர்களெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினின் முட்டப் பாசக் கயிற்றாற்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கச்
செக்கு செக்கு செதில்செதி லாகச்
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந் தோடத்

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுட னிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்தனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்காய்
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்கும்உன்றிரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழிப் பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தில்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட

எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில ணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரமி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கவென் வறுமைக ணீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்த சஷ்டிக் கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையிற் கருத்துட னாளும்
ஆசார ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்த சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்

திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத் தாட்கொள்ள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலா போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

கந்த சஷ்டி கவசம் முற்றிற்று.

**T.JEYARUBAN & CO**
POINTPEDRO ROAD, NELLIADY
Tel: 0212262941 Reg No:562

**01.03.2012 தொடக்கம் 30.12.2013 வரையான**
**வரவு செலவுக் கணக்கு விபரம்**

**வரவு**

| | | |
|---|---|---|
| திருப்பணி நிதி வரவு | | 7377014.80 |
| உண்டியல் நிதி வரவு | | 1213230.00 |
| இலங்கை வங்கி சேமி.க.கு வட்டி வரவு | | 93736.99 |
| செலான் வங்கி சேமி.க/கு வட்டி வரவு | | 3735.96 |
| மொத்தவரவு | | 8687717.75 |

**செலவு**

| | | |
|---|---|---|
| மடப்பள்ளிவேலை சுற்றுமண்டபவேலைRuhilns கொடுப்பனவு | 2261519.00 | |
| திருப்பணிச்செலவுகள் | 4319207.00 | |
| திருமணமண்டப அறைதிருத்தசெலவுகள் | 366125.00 | |
| அம்மன் வில்லுமண்டபம் திருத்தச்செலவுகள் | 1298506.00 | |
| வாகன கூலி | 126346.00 | |
| சம்பளச்செலவு | 232750.00 | |
| ஆலய மணிதிருத்தசெலவுகள் | 344600.00 | |
| உயர் கல்வி மாணவர்களுக்கான உதவிக்கொடுப்பனவு | 31300.00 | |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் சம்பளம் | 853200.00 | |
| காகிதாதிகள் செலவு | 18050.00 | |
| தொலைபேசி கட்டணம். | 4000.00 | |
| மின்கட்டணம். | 18500.00 | |
| வங்கிசெலவு | 3203.06 | |
| | | 9877306.06 |
| வரவை மீறியசெலவு | | **1189589.69** |

T.JEYARUBAN & Co. Accounting & Tax Consultants

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்
தொண்டைமானாறு

**T.JEYARUBAN & CO**
POINTPEDRO ROAD, NELLIADY

Tel: 0212262941 Reg No:562

## 01.01.2014 கணககின் பிரதிபலிப்பு

| | | |
|---|---|---|
| 29.02.2012 கணக்கு அறிக்கையின்படி | | 2377259.14 |
| இலங்கை வங்கி சேமி.க/கு இல- 7345848 | 322169.97 | |
| இலங்கை வங்கி சேமி.க/கு இல- 72090184 | 172120.67 | |
| செலான் வங்கி சேமி.க/கு இல-0138424 | 29276.66 | |
| 31.12.2013 கணக்கு அறிக்கையின்படிமேலதிகசெலவு | 1189589.69 | |
| Iron Safe கொள்வனவு | 74500.00 | |
| பொருள் இருப்புப்பவுண் | 337880.00 | |
| காசுக்கையிருப்பு | 251722.15 | |
| | 2377259.14 | 2377259.14 |

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்
தொண்டைமானாறு

தலைவர் செயலாலர் பொருளாளர்.

PRESIDENT

திருப்பணிச்சபை அங்கத்தவர்களுக்கு

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயதிருப்பணிச்சபையின் 01.03.2012தொடக்கம் 31.12.2013 வரையான கொடுப்பனவுசெலவு உறுதிச்சிட்டைகள், வரவு ரசிதுகள், என்பவற்றை பார்வையிட்டு அவற்றுக்குஅமையவும் கொடுக்கப்பட்ட தகவல்கல் விளக்கங்களுக்கு அமையவும் நாட்குறிப்பேடு பேரேடு ஐந்தொகை ஏடுகள் பதிவு செய்யப்பட்டு மேற்படிகணக்குஅறிக்கையைத் தயாரித்துள்ளோம்.

கணக்காளர்
(த.ஜெயரூபன்.)

**T. Jeyaruban & Co.**
**Accounting & Tax Consultants**
**112, First Floor**
**Main Street, Nelliady.**
**Tel: 021-2262941.**

# ஆலய திருப்பணிகள் பற்றிய அறிவித்தல்

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் தொண்டைமானாறு எம்பெருமான் அடியார்களே அன்பு வணக்கம்!

எம்பெருமான் ஆலய திருப்பணி வேலைகள் அடியார்களாகிய உங்களின் மனம் விரும்பிய பங்களிப்புக்கள் மூலம் நிறைவடைந்துள்ளது.

மேலும் எஞ்சியுள்ள திருப்பணிகளான ஆலய தேர்முட்டி 1986 யுத்தகாலத்தில் எரியூட்டப்பட்டதன் விளைவாக இன்று அதன் பலம் கேள்விக்குறியாகியுள்ளது. இருந்தபோதும் இத் தேர்முட்டியிலே தற்போது எம்பெருமானின் மூன்று தேர்களும் சப்பறமும் உள்ளது. இவற்றுக்கான சரியான இருப்பிடம் அமைப்பதற்கு பாரியளவு நிதி தேவைப்படும் என பொறியியலாளர்கள் கூறியுள்ளனர். அத்துடன் விநாயகர்பெருமான் வெளி மண்டபமும் புதிதாக கட்டவேண்டிய தேவை உள்ளதால் அடியார்களாகிய உங்களது மனம் விரும்பிய பங்களிப்புக்களை எதிர்பார்க்கின்றோம். ஆலய திருப்பணிக்கு நிதி செலுத்த விரும்பும் அடியார்கள் ஆலய முன் மண்டபத்தில் அமைந்துள்ள திருப்பணி உண்டியலிலோ அல்லது அதற்கு அருகாமையிலுள்ள திருப்பணிக்காரியாலயத்திலோ செலுத்தி திருப்பணிப் பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளுங்கள். வெளி மாவட்டங்களிலும் வெளி நாடுகளிலும் வாழும் பெருமான் அடியார்கள் இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கு இல 7345848 இலும் யாழ் செலான் வங்கி இல 0850-01308424-101 இலும் செலுத்தலாம். வங்கியில் செலுத்தப்படும் பணத்திற்கு வழங்கப்படும் ரசிதினை அனுப்பி ஆலய திருப்பணிப் பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலும் ஆலய பரிபாலன சபையானது அறக்கட்டளை நிதியத்தினூடாக பொருளாதாரம் பின்தங்கிய மாணவர்களுக்கு உதவித்தொகையை தொடர மாதாந்தம் கொடுப்பனவுகளை செய்து வருகின்றது. அதற்கான நிதியினை அறக்கட்டளை நிதியம் மக்கள்வங்கி பருத்தித்துறை கணக்கு இல 265-063125-2 என்னும் இலக்கத்தினூடாக பங்களிப்புச் செய்யலாம்.

மற்றும் நித்திய அன்னதானப் பணிக்கான நிதியினை நித்திய அன்னதானப்பணி கொமர்ஷல் வங்கி நெல்லியடி கணக்கு இல 08108036333 என்னும் இலக்கத்தினூடாக அனுப்பி அதன் வங்கி ரசிதினையும் எந்தத்திகதி அன்னதானம் செய்யவேண்டும் என்பதையும் பரிபாலன சபைக்கு அறியத்தரவும்.

மேலும் ஆலய சூழலில் இலவச வைத்திய சேவையும் சபை அனுசரனையும் நடைபெற்று வருகின்றது. எம்பெருமான அடியார்கள் எம்பெருமானின் இது போன்ற கைங்காரியங்களில் நீங்களும் பங்குபற்றி எதிர்காலம் இன்புற்றிருக்க எம்பெருமான் நல்லருள் நல்குவாராக.

மேலும் விபரங்கட்கு,
தலைவர்/ செயலாளர்,
ஆலய பரிபாலனசபை
ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்
தொண்டைமானாறு
காரியாலயம் : 021-3734392

**வங்கி கணக்குகள் ஆலயதிருப்பணி**

*இலங்கை வங்கி : (பருத்தித்துறை - 7345848)*
*(வல்வெட்டித்துறை - 72090184)*
*செலான் வங்கி : (யாழ்ப்பாணம் - 0850-01308424-101)*
*அறக்கட்டளை நிதியம்*
*(மக்கள் வங்கி பருத்தித்துறை- 265-063125-2)*
*நித்திய அன்னதானப் பணி*
*(கொமர்ஷல் வங்கி நெல்லியடி - 8108036333)*
*நிர்வாக வைத்தியசேவைக்கான நிதி*
*(கொமர்ஷல் வங்கி நெல்லியடி - 8100803634)*

*Telephone - 0213734392 Internet - www Sannathy.com*
*Email - sriselvasannathy@sannathy.com*